தேச பக்தி
DHESA BAKTHI
நடுநிலை காலை நாளிதழ்
RNI.No.TNTAM/2022/86012
ஆசிரியர்: G. ராஜா 9842364068
இணைஆசிரியர்: R. கண்ணன் 9994422779
★மலர்:05 ★இதழ்:130 ★10.09.2026 ★தமிழ் நாளிதழ் ★வியாழக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை
★Volume:05 ★Issue:130 ★10.09.2026 ★TamilDaily ★Thursday ★Page-4 ★Price-₹5/- Chennai



# திருவண்ணாமலையில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் தொடக்கம்

## 1.74 லட்சம் பேர் பதிவு - 45 வகையான போட்டிகளில் வீரர், வீராங்கனைகள் பங்கேற்பு

திருவண்ணாமலை, செப்.10

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெறும் முதலமைச்சர் கோப்பை 2026 மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தனா கார்க் இன்று (09.09.2026) மாவட்ட விளையாட்டு மைதானத்தில் தொடங்கி வைத்து, போட்டிகளை பார்வையிட்டார். இந்நிகழ்வில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.அபிஷேக் முன்னிலை வகித்தார்.

தமிழ்நாட்டில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு பணியாளர்கள் என அனைத்து தரப்பினரும் விளையாட்டில் பங்கேற்கும் வகையில்முதலமைச்சர் கோப்பைவிளையாட்டு போட்டிகள் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, திருவண்ணா மலை மாவட்டத்தில் செப்டம்பர் 9 முதல் 26ம் தேதி வரை பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெறுகின்றன.

**1.74 லட்சம் பேர் பதிவு**

திருவண்ணாமலை மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பதற்காக 1,74,461 பேர் இணையதளம் மூலம் பதிவு செய்துள்ளனர்.

தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, சிலம்பம், கையுந்துபந்து, இறகுப்பந்து, கைப்பந்து, பால் பேட்மிண்டன், மேசைப்பந்து உள்ளிட்ட 45 வகையான விளையாட்டு போட்டிகள், 5 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு தேதிகளில் நடத்தப்பட உள்ளன.

போட்டிகளில் தனிநபர் பிரிவில் மாவட்ட மற்றும் மண்டல அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.3,000, இரண்டாம் பரிசாக ரூ.2,000, மூன்றாம் பரிசாக ரூ.1,000 வழங்கப்படுகிறது. மாநில அளவிலான தனிநபர் போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு முதல் பரிசாக ரூ.1 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ.75 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.50 ஆயிரம் வழங்கப்பட உள்ளது.

குழு போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசாக தலா ரூ.75 ஆயிரம், இரண்டாம் பரிசாக தலா ரூ.50 ஆயிரம், மூன்றாம் பரிசாக தலா ரூ.25 ஆயிரம் வழங்கப்பட உள்ளது.

'விளையாட்டு சுய ஒழுக்கத்தையும் உடல் நலத்தையும் மேம்படுத்தும்'

போட்டிகளை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிகாட்டுதலின் படி மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைவிளையாட்டு போட்டிகள் நடைபெற்று வருகின்றன. விளையாட்டு என்பது சுய ஒழுக்கத்தையும், உடல் நலத்தையும் காக்கும் சிறந்த வழியாகும்.

மாணவ, மாணவிகள் அனைவரும் விளையாட்டில் ஆர்வம் கொண்டு, கடினமாக உழைத்து போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று சாதனைகளை படைக்க வேண்டும். தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அவற்றை முறையாக பயன்படுத்திக் கொண்டு விளையாட்டிலும், வாழ்க்கையிலும் முன்னேற்றம் அடைய வேண்டும்.

தமிழ்நாட்டிலேயே திருவண்ணாமலை மாவட்டத்தில் அதிக அளவில் விளையாட்டு போட்டிகளில் பங்கேற்க விண்ணப்பித்து, போட்டிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் வாழ்த்துகள். போட்டிகளில் பங்கேற்க வந்துள்ள அனைத்து மாணவ, மாணவிகள் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் சிறப்பாக விளையாடி வெற்றி பெற்று, மாநில அளவிலான போட்டிகளிலும்சாதனைபடைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க், பேட்மிண்டன் மற்றும் மேசைப் பந்து போட்டிகளில் வீரர், வீராங்கனைகளுடன் இணைந்து விளையாடி, போட்டிகளை உற்சாகப்படுத்தியதுடன், விளையாட்டு வீரர்களின் திறமைகளையும் பார்வையிட்டார்.

**தங்க மோதிர பாதுகாப்பு பெட்டகங்கள் ஆய்வு**

இதனைத் தொடர்ந்து, திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரிமருத்துவமனைக்கு சென்ற மாவட்ட ஆட்சித்தலைவர், 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தின் கீழ் மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் தங்க மோதிரங்களை பாதுகாப்பாக வைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பெட்டகங்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளின் விவரங்கள், இத்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள், தங்க மோதிரங்களை பாதுகாப்பாக பராமரிக்கும் நடைமுறைகள் உள்ளிட்டவை குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டறிந்தார்.

இந்நிகழ்வில் மண்டல முதுநிலை மேலாளர் (பொறுப்பு) சாந்தி, மாவட்ட துணைகாவல் கண்காணிப்பாளர் சிவனு பாண்டியன், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் சண்முகப்பிரியா, அரசு மருத்துவக் கல்லூரிமருத்துவமனை முதல்வர் டாக்டர் எட்வினா வசந்தா மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தவெக ஆதரவு அணிக்குப் புதிய பெயர்: மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றி கூட்டணி

## தலைவராக முதல்வர் விஜய் ஒருமனதாகத் தேர்வு

தவெக, காங்கிரஸ், மதிமுக, விசிக, ஐயுஎம்எல் இணைந்து 'மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணி'யைத் தொடங்கி உள்ளன. கூட்டணிக்குத் தலைவராக முதல்வர் விஜய் ஒருமனதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.




தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் 108 இடங்களைத் தமிழக வெற்றிக் கழகம் (தவெக) கைப்பற்றியது.

ஆட்சி அமைக்க 118 இடங்கள் இல்லாததால், காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விசிக, ஐயுஎம்எல் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன்தவெக ஆட்சி அமைத்தது. காங்கிரஸ், விசிக, ஐயுஎம்எல் ஆகிய கட்சிகள் அமைச்சரவையில் இடம் பெற்றன.

இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கட்சிகள் வெளியில் இருந்து அரசுக்கு ஆதரவு அளித்து வருகின்றன. மதிமுகவும் தவெக அரசுக்கு ஆதரவு அளிக்கிறது.

தவெக தலைமையில் புதிய கூட்டணியை உருவாக்குவதற்காக ஆதரவு கட்சிகளின் முதல் ஆலோசனை கூட்டம் கடந்த ஜூலை 1ம் தேதி நடந்தது. அரசுக்கு வெளியில் இருந்து ஆதரவு தருவதாகக் கூறி, கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டும் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், நேற்று 2வது ஆலோசனை கூட்டம் சென்னை அடுத்த பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்தில் நடந்தது. தமிழக காங்கிரஸ் தலைவர் மாணிக்கம் தாகூர், பிரவீன் சக்கரவர்த்தி எம்.பி., எம்எல்ஏ தாரகை கத்பர்ட், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ, துரை வைகோ எம்.பி., ஐயுஎம்எல் தலைவர் காதர் மொய்தீன், சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் ஷாஜகான், விசிக தலைவர் திருமாவளவன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜூனா, அருண்ராஜ், செங்கோட்டையன், சிடிஆர். நிர்மல் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தவெக தலைமையிலான கூட்டணிக்கு, 'மதச்சார்பற்ற சமூக நீதி வெற்றிக் கூட்டணி' என்று பெயர் சூட்டப்பட்டது. கூட்டணிக்குத்தலைவராக முதல்வர் விஜய் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார். பின்னர் கூட்டணிக் கட்சிகளின்தலைவர்கள் கூறியதாவது:

தமிழகக் காங்கிரஸ் கமிட்டி தலைவர் மாணிக்கம் தாகூர்:

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள 2 தொகுதிகளுக்கான தவெக கூட்டணி வேட்பாளர்கள் நாளை (இன்று) அறிவிக்கப்பட உள்ளனர். அவர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்வோம். தமிழகத்தில் பல ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு நேர்மையான ஆட்சி அமைந்துள்ளது.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ: இந்தக் கூட்டணியின் பெயரிலேயே மதச்சார்பின்மை, சமூக நீதி அடங்கி உள்ளது. தவெகஎடுக்கும்அனைத்து முடிவுக்கும் உடன்பட்டு செயல்படுவோம்.

விசிகதலைவர்திருமாவளவன்: ஆதரவாக இருந்த கட்சிகள் இணைந்து கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. ஒருமித்த கருத்தோடு இந்தக் கூட்டணி செயல்படும்.

ஐயுஎம்எல் தலைவர் காதர் மொய்தீன்: தமிழகத்தில் புதிய வரலாற்றை தவெக படைத்துள்ளது. வருங்காலத்தில் உலகம் பாராட்டும் அளவுக்கு இந்தக் கூட்டணி இருக்கும்.

அமைச்சர் ஆதவ் அர்ஜூனா:

தேர்தலுக்கான கூட்டணியாக மட்டும் இல்லாமல் கொள்கை ரீதியான கூட்டணியாகச் செயல்படும். கம்யூனிஸ்ட் கட்சிகளின் கொள்கை பெயரும் கூட்டணியில் உள்ளது. இவ்வாறு அவர்கள்கருத்து தெரிவித்தனர்.

# ரூ.1,200 கோடியில் பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலக வளாகம்: தமிழக அரசின் அரசாணை வெளியீடு

நவீன வசதிகளுடன் கூடிய புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச்செயலகம் சென்னை பட்டினப் பாக்கத்தில் அமைக்கப்பட உள்ளது. இதற்கான ஒப்புதலை வழங்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் வென்று தவெக கடந்த மே 10ம் தேதி ஆட்சியமைத்தது. அதன் பின்னர் அலுவல் மற்றும் நிர்வாக ரீதியாக பல்வேறு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, தற்போது தலைமைச் செயலகத்தில் உள்ள பிரதான புனித ஜார்ஜ் கோட்டையில் 3வது தளத்தில் செயல்பட்டு வரும் முதல்வர் அலுவலகம், நாமக்கல் கவிஞர் மாளிகைக்கு மாற்றப்பட உள்ளது.

இதற்கிடையில், தற்போதைய தலைமைச் செயலகத்தில் இடப் பற்றாக்குறை, வாகன நிறுத்தும் இடவசதி குறைபாடு மற்றும் புதிய கட்டிடங்களை அமைப்பதற்கான கட்டுப்பாடுகள் போன்ற குறைபாடுகள் உள்ளன. இதனால் தலைமைச் செயலகத்தை வேறு இடத்துக்கு மாற்ற தவெக அரசு முடிவு செய்தது.

இதையடுத்து நவீன வசதிகளுடன் கூடிய புதிய சட்டப்பேரவை மற்றும் தலைமைச் செயலகம் அடங்கிய புதிய கட்டிட வளாகம் சென்னையில் 20 லட்சம் சதுர அடியில் ரூ.1,200 கோடியில் உருவாக்கப்படும் என்று சட்டப்பேரவையில் முதல்வர் விஜய் கடந்த செப்டம்பர் 3ம் தேதி அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து, புதிய தலைமைச் செயலகத்துக்காகக் கோயம்பேடு, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலைய வளாகம், பட்டினப்பாக்கம் மற்றும் நந்தம்பாக்கம் பகுதிகளில் உள்ள இடங்கள் பரிசீலிக்கப்பட்டன. அதில் முதல்வர்விஜய் பரிந்துரையின்படி பட்டினப்பாக்கம் இறுதி செய்யப்பட்டது.

இதற்காக பட்டினப்பாக்கத்தில் 25.55 ஏக்கர் நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அரசு துறைகளுக்குச் சொந்தமான அந்த நிலங்களை எடுத்து பணிகளைத் தொடங்க முதல்கட்ட ஒப்புதல் வழங்கி பொதுத்துறை செயலர் சுந்தர வல்லி நேற்று முன்தினம் அரசாணை வெளியிட்டுள்ளார்.

அதன்படி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் (21.76 ஏக்கர்), சென்னை மாநகராட்சி (0.93 ஏக்கர்) மற்றும் வருவாய்த்துறைக்குச் சொந்தமான (1.73 ஏக்கர்) இடங்களை ஒருங்கிணைத்து 25.55 ஏக்கர் பரப்பில் இந்த புதிய தலைமைச் செயலக வளாகம் அமைக்கப்படுகிறது. அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய புதிய சட்டப்பேரவை வளாகம், தலைமைச் செயலக கட்டிடம் தோராயமாக 20 லட்சம் சதுரஅடி பரப்பில்அமையவுள்ளது. இந்தத் திட்டத்துக்கான விரிவான அறிக்கையை 3 மாதங்களுக்குள் பொதுப்பணித் துறை சமர்ப்பிக்க வேண்டும். மேலும், இத்திட்ட பணிகளைத் துரிதப்படுத்த, கட்டிட வடிவமைப்பு நிறுவனத்தை முடிவு செய்ய, திட்ட வரைபடம், வடிவமைப்பு ஆகியவற்றை இறுதி செய்ய, கட்டிடத்துக்கான வரைபடம், இறுதி வடிவமைப்பை முடிவு செய்து அளிக்க என 3 சிறப்பு குழுக்களை அமைக்கவும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.



முன்னதாக இடநெருக்கடி காரணமாக தலைமைச் செயலகத்தை மாற்றுவது தொடர்பாக ஏற்கெனவே பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 2003ல் தலைமைச் செயலகத்துக்கான புதிய வளாகம் அமைக்க திட்டமிட்டார். அந்த திட்டம் நடைமுறைக்கு வரவில்லை. அதன்பின் 2010ல் திமுக ஆட்சியில் சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் தலைமைச் செயலக கட்டிடம் கட்டி திறக்கப்பட்டது. ஆனால், அதிமுக ஆட்சிக் காலத்தில், புதிய தலைமைச் செயலகத்துக்காகக் கட்டப்பட்ட கட்டிடம், ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையாக மாற்றப்பட்டது.

# முதலீடுகளை ஈர்க்க முதல்வர் விஜய் லண்டன் பயணம்



வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் விஜய் லண்டனுக்கு இன்று புறப்பட்டுச் செல்வதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

தமிழகத்தை 2036ம் ஆண்டுக்குள் 1.5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்றுவதற்குத் தமிழக அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. அதன்படி தவெக ஆட்சிக்கு வந்தது முதல் 100 நாட்களில் 104 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதன்மூலம் ரூ.1 லட்சத்து 2,514 கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு லட்சத்து 21,788 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழகத்துக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் விஜய் லண்டனுக்கு இன்று (செப்.10) புறப்பட்டு செல்வதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதற்காக இன்று இரவு 10 மணியளவில் சென்னையில் இருந்து எமிரேட்ஸ் விமானம் மூலம் துபாய் செல்லும் முதல்வர் விஜய், அங்கிருந்து லண்டன் செல்கிறார்.

லண்டனில் நடைபெறும் முதலீட்டாளர்கள்சந்திப்பில் பங்கேற்கும் முதல்வர் விஜய், பல்வேறு தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து தமிழகத்தில் தொழில் தொடங்க வருமாறு அழைப்பு விடுக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும், அங்கு தனது நண்பர் நடிகர் அஜித்குமாரின் கார் பந்தயத்தை முதல்வர் பார்வையிட இருப்பதாகக் கூறப்படுகிறது. லண்டனில் வசிக்கும் தமிழர்களையும் சந்தித்து முதல்வர் விஜய் கலந்துரையாட உள்ளார். இந்தப்பயணத்துக்கானமுன்னேற்பாடுகளை மேற்கொள்வதற்காக அரசின் உயரதிகாரிகள் ஏற்கெனவே லண்டன் புறப்பட்டு சென்றுள்ளனர்.

லண்டன் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு, அங்கிருந்து புறப்பட்டு துபாய் வழியாகச் செப்.17ம் தேதி காலை சென்னை வரவுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது. முதல்வரான பின்னர் விஜய் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு பயணம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் ஊராட்சியில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சாலையை சரி செய்த தவெக நிர்வாகி எம்.கார்த்திக்

செங்குன்றம், செப்டம்பர் 10:

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி







பாலமுருகன் நகர் 2வது தெருஅண்மையில்பெய்த மழையால் சாலை முழுவதும் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத அளவிற்கு மழைநீர் தேங்கி நின்றது. இதனால் பொதுமக்கள் இச்சாலையை பயன்படுத்த மிகவும் சிரமப்பட்டு வந்தனர்.

இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள்திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டம், சோழவரம் கிழக்கு ஒன்றியத்திற்குட்பட்ட நல்லூர் ஊராட்சி தவெக நிர்வாகி எம்.கார்த்திக்கை நேரிடையாக சந்தித்து, இத்தெருவை சரி செய்து தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களின் கோரிக்கையை உடனடியாகஏற்று தவெக நிர்வாகி எம்.கார்த்திக் மழைநீர் தேங்கி நின்ற தெருவில் ரப்பீஸ் உள்ளிட்ட தேவையான பொருள்களை கொண்டு நிரப்பி, ஜெபிசி இயந்திரம் மூலம் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் சரி செய்து கொடுத்தார். இச்செயலை இப்பகுதி பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் வெகுவாகப் பாராட்டினர்.

# செங்குன்றம் பம்மதுகுளத்தில் கார் மோதி கார் டிரைவர் மற்றும் நர்சிங் மாணவி இரண்டு பேர் பலி

செங்குன்றம், செப்டம்பர் 10:

திருவள்ளூர் மாவட்டம் மாதவரம் தொகுதி சோழவரம் அடுத்த பழைய எருமை வெட்டிபாளையம் கிராமத்தைச் சேர்ந்தவர் லோகேஷ் (வயது 24). இவர் கார் டிரைவராக பணியாற்றி வந்தார். அதே





பகுதியை சேர்ந்த அவருடைய உறவினர்லோகேஸ்வரி (வயது 17) நர்சிங் பயிற்சி படித்து வந்தார். இருவரும் முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் வீட்டிலிருந்து புறப்பட்டு தாம்பரம் செல்வதற்கு மீஞ்சூர் வண்டலூர் வெளிவட்டச் சாலையில் சாலையில் செங்குன்றம் அடுத்த கோணிமேடு ரவுண்டானா மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த கார் ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இருவரும் நிலை தடுமாறி தலையில் பலத்த காயங்கள் ஏற்பட்டு ரத்த வெள்ளத்தில் துடித்தனர்.

உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் இருவரையும் மீட்டு லோகேஸ்வரியை செங்குன்றம்அடுத்த பாடியநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்து போனார்.

லோகேஷ் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றபோது, அங்கு பரிசோதித்த மருத்துவர்கள் வரும் வழியிலே இறந்து விட்டதாக கூறினர்.

இது குறித்து புகாரின் பேரில் செங்குன்றம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசார் வழக்கு பதிவு செய்து தப்பி ஓடிய கார் டிரைவரை தேடி வருகின்றனர்.

# திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம்

## ஆட்சியர் வந்தனா கார்க் நேரில் ஆய்வு

திருவண்ணாமலை, செப். 10

திருவண்ணாமலை மாவட்டத்தில் அரசின் நலத்திட்டங்கள் முறையாகவும், பயனாளிகளுக்கு உரிய வகையிலும் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க்,இன்று(09.09.2026) திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டார்.



இந்த ஆய்வின்போது, மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு அரசின் சார்பில் வழங்கப்படும் தங்க மோதிரங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்.

மேலும், திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகளின் விவரங்கள், மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளின் எண்ணிக்கை, அவர்களின் விவரங்களை பதிவு செய்யும் நடைமுறைகள், தங்க மோதிரங்களை பாதுகாப்பாக பராமரித்து உரிய பயனாளி களிடம் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஆகியவை குறித்து சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

தங்க மோதிரங்களை பாதுகாப்பாக வைத்திருப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பெட்டகங்கள் மற்றும் அதற்கான பாதுகாப்பு நடைமுறைகள் குறித்தும் ஆட்சியர் ஆய்வு செய்தார். தங்க மோதிரங்கள் முறையாக பாதுகாக்கப்படுவதுடன், தகுதியான குழந்தைகளுக்கு எவ்வித காலதாமதமும் இன்றி வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், திட்டத்தின் செயல்பாட்டில் ஏதேனும் நடைமுறை சிக்கல்கள் உள்ளதா, பயனாளிகளுக்கு திட்டத்தின் பயன்கள் முறையாக சென்றடைகிறதா என்பது குறித்தும் ஆட்சியர் கேட்டறிந்தார். மருத்துவமனையில் திட்டம் தொடர்பான பதிவுகள் மற்றும் ஆவணங்களை முறையாக பராமரிக்கவும், பயனாளிகளின் விவரங்களை துல்லியமாக பதிவு செய்யவும் அறிவுறுத்தினார்.

'தாய்மாமன்தங்கமோதிரம்' திட்டம் போன்ற அரசின் நலத்திட்டங்கள் மக்களின் வாழ்க்கையில் நேரடி பயனை ஏற்படுத்தக்கூடியவை என்பதால், அவற்றின் செயல்பாடுகளில் எந்தவித குறைபாடும் ஏற்படாத வகையில் அலுவலர்கள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் வலியுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கண்காணிப்பாளர்மாலதி, மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் டாக்டர் எட்வினா வசந்தா மற்றும் மருத்துவத்துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



# ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா

## இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் தொடங்கி வைத்தார்

இராணிப்பேட்டை செப்.10

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன் இ.ஆ.ப., அவர்கள் இன்று (9.9.2026) நெமிலி வட்டம். கீழாந்துரை கிராம சமுதாயக் கூடத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்புத் திட்ட முகாமில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாத விழாவினை குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்கள்.

தொடர்ந்து தன்னார்வலர் மூலம் 50 அங்கன்வாடி மையங்களில் வீட்டுத்தோட்டம் அமைக்க பழ மரக்கன்றுகளையும். கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறை உள்ள குழந்தைகளுக்கு மாவட்ட ஆட்சியரின் CSR நிதி மூலம் ஊட்டச்சத்துள்ள மில்க் ஷேக் வழங்கினார்கள்.

பின்னர். நமது அங்கன்வாடி நமது பொறுப்பு மற்றும் அங்கன்வாடி மையங்களை சுற்றி செய்ய கூடியவை மற்றும் செய்யக் கூடாதவை குறித்து அமைக்கப்பட்டிருந்த விழிப்புணர்வு செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

பெண்கள் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகம் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் தேசிய ஊட்டச்சத்து மாத விழா கொண்டாடப்பட்டு வருகிறது. அதன்படி 2026 ஆம் ஆண்டிற்கு நமது அங்கன்வாடி நமது பொறுப்பு என்ற கருப்பொருளில் நாடு முழுவதும் இன்று (9.9.2026) தேசிய ஊட்டச்சத்து மாத விழா கொண்டாடப்பட உள்ளது.

இவ்விழாவில் இந்த ஆண்டின் முக்கிய கருப்பொருளாக உணவில் பல்வேறு வகைகள் மற்றும் போதுமான புரதச்சத்து, அங்கன்வாடி மையங்களில் புதிதாக சமைக்கப்பட்ட சூடான உணவு வழங்குதல். மையங்களை பராமரித்தலில் சமூகத்தின் பொறுப்புணர்வு மற்றும் பொறுப்பேற்பு, குழந்தைகளின் வளர்ச்சிக்கான ஊட்டச்சத்து மற்றும் ஆரம்ப கால தூண்டுதலின் அவசியம், மேலும் பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா திட்டத்தின் மூலம் தாய்மார்களின் நலனுக்கான பண பரிமாற்ற உதவி வழங்குதல் குறித்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

இதன் ஒரு பகுதியாக இன்று ஊட்டச்சத்து பற்றிய கண்காட்சி அமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மாவட்டத்தில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களிலும் இன்று முதல் மேலே குறிப்பிட்டுள்ள தலைப்புகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாதம் முழுவதும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் மாவட்ட திட்ட அலுவலர் செல்வி.சாந்தி பிரியதரிசினி, குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள் மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# டிஜிட்டல் அரஸ்ட் என்று கூறி ரூ.25.6 லட்சம் மோசடி செய்த வழக்கில் குற்றவாளி கைது

ஆவடி, செப்டம்பர் 10:



ஆவடி காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட ஓரகடம், அம்பத்தூர் பகுதியை சேர்ந்த ஆண்ட்ரூஸ் பொன்ராஜ் வைரமணி (வயது 6) என்பவரிடம் எதிரிகள் தொலைபேசி மூலம் தொடர்புக்கொண்டு தாங்கள் தெலுங்கான CBI Commissioner பேசுவதாகவும், தங்களின் ஆதார் கார்டு பயன்படுத்தி சட்ட விரோத பண பரிவர்த்தனை நடந்திருப்பதாகவும், உங்களுடைய பணம் சட்டபடியான பரிவர்த்தனை உடையது என நிருபிக்க வேண்டுமானால் நாங்கள் கொடுக்கும் மூன்று வங்கி கணக்குகளில் தங்களிடம் இருக்கும் மொத்த பணத்தையும் உடனடியாக அனுப்பினால் அதனை சரிபார்த்து 6 முதல் 72 மணி நேரத்திற்குள் புகார்தாரரின் வங்கி கணக்கிற்கே திருப்பி அனுப்பி விடுவதாகவும், அவ்வாறு அனுப்பவில்லையெனில் புகார்தாரருடைய வங்கி கணக்குகளை முடக்கி டிஜிட்டல் அரஸ்ட் செய்ய கூடும் என மிரட்டி கடிதம் அனுப்பியதின் பேரில் புகார்தாரர் பயந்து குற்றவாளிகள் அனுப்பிய மூன்று வங்கி கணக்குகளுக்கும் மொத்தம் ரூ.25,60,000/ அனுப்பியதாகவும், ஆனால் பணத்தை பெற்றுக் கொண்ட மோசடி நபர்கள் அந்த தொகையினை புகார்தாரருக்கு திரும்ப கொடுக்கவில்லை எனவும் தான் ஏமாற்றப்பட்டுள்ளதை உணர்ந்த புகார்தாரர் தன்னை ஏமாற்றிய நபர்களின் மீது நடவடிக்கை எடுக்குமாறு ஆவடி காவல் ஆணையாளர் டி. செந்தில்குமாரிடம் கொடுத்த புகாரின் அடிப்படையில் இணையவழி குற்றப்பிரிவு காவல் ஆய்வாளரால் ஆவடி சைபர் கிரைம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளை பற்றிய புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளில் ஒருவர் தெலுங்கானாமாநிலத்தில்பதுங்கிஇருப்பதாககிடைத்த தகவலின் அடிப்படையில் ஆவடி காவல் ஆணையாளர்டி.செந்தில்குமார் பிறப்பித்த உத்தரவின் பேரிலும், காவல் துணை ஆணையாளர் தலைமையிடம் வனிதா அறிவுறுத்தலின்படியும், இணையவழி குற்றப்பிரிவு கூடுதல் துணை ஆணையாளர் அர்னால்டு ஈஸ்டர் வழிகாட்டுதல்படியும், இணையவழி குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் சுபாஷினி பார்டி சகிதம் தெலுங்கானா மாநிலத்திற்கு சென்று தலைமறைவாக பதுங்கி இருந்த குற்றவாளியான வேமுலா சிவா சங்கர் (வயது 25) என்பவரை கைது செய்து பூந்தமல்லி நடுவர்நீதிமன்றம்நீதிபதியிடம் ஆஜர்படுத்தி நீதிமன்ற காவலில் புழல் மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு ராணிப்பேட்டையில் சிலைகள் தயாரிப்பு தீவிரம்

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சிலைகள்தயாரிப்பு தீவிரம்...

நாடு முழுவதும் செப்டம்பர் 14ஆம் தேதி விநாயகர் சதுர்த்தி விழா விமரிசையாக கொண்டாடப்பட உள்ள நிலையில், பல்வேறு பகுதிகளில் விநாயகர் சிலைகள் தயாரிக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ராணிப்பேட்டை மாவட்டத்திலும் விநாயகர்சதுர்த்தியைமுன்னிட்டு சிலை தயாரிக்கும் தொழிலாளர்கள் ஆர்வத்துடன் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். சோளிங்கர்கால் நடை மருத்துவமனை அருகே மற்றும் வாலாஜாபேட்டை வட்டாட்சியர் அலுவலகம் அருகே காகிதக் கூழ் உள்ளிட்ட பொருட்களைக் கொண்டு 2 அடி முதல் 8 அடி உயரம் வரை பல்வேறு வடிவங்களில் விநாயகர் சிலைகள் தயாரிக்கப்பட்டு, வண்ணம் தீட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதில் மூஷிக வாகனம், நந்தி வாகனம், மயில் வாகனம், சிம்ம வாகனம் உள்ளிட்ட பல்வேறு வாகனங்களில் விநாயகர் அமர்ந்திருப்பது போன்றும், பல்வேறு அலங்காரங்களுடனும் சிலைகள் கலைநயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளன.



சோளிங்கர், வாலாஜா ஆற்காடு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து பொதுமக்கள் விநாயகர் சிலைகளை ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

சிலைகளின் அளவு மற்றும் வடிவமைப்புக்கு ஏற்ப விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், 2 அடி உயர சிலைகள் ரூ.2,500 முதல், 8 அடி உயர சிலைகள் ரூ.16 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகின்றன.

விநாயகர் சதுர்த்தி விழா நெருங்கி வருவதால், சிலைகள் தயாரிப்பு மற்றும் விற்பனை பணிகள் மேலும் தீவிரமடைந்துள்ளன.

### பயிர்க்கடன் தள்ளுபடி வாக்குறுதி என்னாச்சு?

# தவெக போட்டியிட்டால் மதுராந்தகம், தாராபுரத்தில் தோற்கடிப்போம்

## விவசாயிகள் சங்கம் எச்சரிக்கை



சென்னை, செப். 10–

தமிழக விவசாயிகளுக்கு சட்டமன்ற தேர்தலின்போது அளித்த பயிர்க்கடன் தள்ளுபடி வாக்குறுதியை தவெக அரசு முழுமையாக நிறை வேற்றவி ல்லை என குற்றம்சாட்டியுள்ள உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கம், வரும் இடைத்தேர்தலில் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதிகளில் தவெக போட்டியிட்டால், அக்கட்சியை தோற்கடிக்கும் வகையில் விவசாயி களை திரட்டி தீவிர பிரசாரம் மேற்கொள்ளப்படும் என எச்சரித்துள்ளது.

இதுகுறித்து சங்கத்தின் மாநிலத் தலைவர் ஆர். வேலுசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சட்டமன்ற தேர்தலுக்கு முன்பு தமிழக விவசாயிகளை கவரும் வகையில், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில்சிறுமற்றும்குறுவிவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும், பெரு விவசாயிகள் பெற்ற பயிர்க்கடனில் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் தவெக சார்பில் வாக்குறுதி அளிக்கப்பட்டது. ஆனால், ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டு, பயிர்க்கடன் தள்ளுபடி முறையாகவும் முழுமையாகவும் செயல்படுத்தப்படவில்லை என விவசாயிகள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சியால் விவசாயிகள் பெரும் வருவாய் இழப்பை சந்தித்து வருகின்றனர். இந்த சூழ்நிலையில், விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன்களை எந்தவித பாகுபாடும் இல்லாமல் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ந்து முன்வை க்கப்பட்டு வருகிறது.

தமிழக விவசாயிகளின் ஒட்டு மொத்த குரலாக, அனைத்து விவசாயிகள் சங்கங்களும், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தவெக அரசிடம் இந்த கோரிக்கையை வலியுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரவு பகலாக உழைத்து, தங்களது உழைப்பையும் வியர்வையையும் விவசாயத்தில் செலுத்தி வரும் விவசாயிகளுக்கு அளித்த வாக்குறுதியை அரசு நிறைவேற்ற வேண்டியது அவசியம். குறிப்பாக, வறட்சியால் ஏற்பட்டுள்ள வருவாய் இழப்பையும் கருத்தில் கொண்டு, தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என தமிழக விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த கோரிக்கையை நிறைவேற்ற தவெக அரசு தவறினால், இடைத்தேர்தலில் விவசாயிகளின் அதிருப்தி வெளிப்படும் என்றும் சங்கம் தெரிவித்து ள்ளது.

வரும் இடைத்தேர்தலில் மதுராந்தகம் மற்றும் தாராபுரம் ஆகிய இரு தொகுதிகளிலும் தவெக போட்டியிட்டால், தமிழக விவசாயிகளை மிகப்பெரிய அளவில் திரட்டி அக்கட்சிக்கு எதிராக பிரசாரம் மேற்கொள்ளப்படும். விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றத் தவறியதற்கு தேர்தல் களத்தில் தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என உழவர் பெருந்தலைவர் நாராயணசாமி நாயுடுவின் தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில் தவெக அரசுக்கு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

இவ்வாறு அறிக்கையில் மாநிலத் தலைவர் ஆர். வேலுசாமி தெரிவித்துள்ளார்.





திருவள்ளூர்மாவட்டஆட்சியர்அலுவலகபெருந்திட்டவளாகத்திலுள்ள மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளை2026 மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தொடங்கி வைத்து பார்வையிட்டார். உதவி ஆட்சியர் (பயிற்சி) பி.பவித்ரா, இ.ஆ.ப., மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர்நலன்அலுவலர்அருள்போஸ், மாவட்டதடகள பயிற்றுநர் அ.லாவண்யா பல்வேறு விளையாட்டு பயிற்றுநர்கள். திரளான விளையாட்டு வீரர்வீராங்கனைகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சோளிங்கரில் நகராட்சி சார்பில்

# குப்பைகளை நான்கு வகையாக பிரித்து வழங்குவது குறித்து சுவர் ஓவியம் மூலம் விழிப்புணர்வு

ராணிப்பேட்டை, செப்.10

ராணிப்பேட்டை மாவட்டம் சோளிங்கர் நகராட்சி சார்பில், பொதுமக்கள் குப்பைகளை நான்கு வகையாக பிரித்து வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பேருந்து நிலையத்தில் சுவர் ஓவியம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

சோளிங்கர் நகராட்சி பகுதிகளில் தூய்மையை பாதுகாக்கவும், குப்பைகளை முறையாக சேகரித்து மறுசுழற்சி செய்வதை ஊக்குவிக்கவும் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக, பொதுமக்கள் அதிகம் கூடும் சோளிங்கர் பேருந்து நிலைய வளாகத்தில் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவது குறித்த விழிப்புணர்வு சுவர் ஓவியங்கள் வரையப்பட்டு வருகின்றன.




இதில் மக்கும் குப்பை, மக்காத குப்பை, பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் மின்னணு கழிவுகள் உள்ளிட்ட குப்பைகளை தனித்தனியாக பிரித்து வழங்குவதன் அவசியம் குறித்து விளக்கமாக வரையப்பட்டு வருகிறது.

மேலும், வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் குப்பைகளை தரம் பிரித்து நகராட்சி தூய்மைப் பணியாளர்களிடம் வழங்க வேண்டும் என்றும், பொது இடங்களில் குப்பைகளை கொட்டுவதை தவிர்த்து நகரை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

சுவர் ஓவியம் வரையும் பணிகளை சோளிங்கர் நகராட்சி சுகாதார ஆய்வாளர் தேவிபாலா நேரில் பார்வையிட்டார். அப்போது பொதுமக்கள் மற்றும் பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகளிடம் குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

குப்பைகளை ஆரம்ப நிலையிலேயே தரம் பிரித்து வழங்குவதன் மூலம் குப்பை மேலாண்மையை சிறப்பாக செயல்படுத்துவதுடன், மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை மீண்டும் பயன்படுத்தவும், சுற்றுச்சூழல் பாதிப்பை குறைக்கவும் முடியும் என நகராட்சி சார்பில் தெரிவிக்கப்பட்டது.

# ஆசிரியர்களின் ஊதியத்தை பறிக்கும் தனியார் பள்ளி நிர்வாக சீர்கேடு

## தலையிடுமா மாவட்ட கல்வித்துறை?

சின்னமனூரில் இயங்கி வரும் மிகப்பெரிய புகழ் பெற்ற அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளியில், பள்ளி நிர்வாகத்திற்கும் நிர்வாக குழுவிற்கும் இடையே நிலவி வரும் பல்வேறு சீர்கேடுகளால் ஆசிரியர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர் மாதம் முழுவதும் அர்ப்பணிப்புடன் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மாத இறுதியில் வழங்கப்பட வேண்டிய ஊதியம் வழங்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் தங்களின் அடிப்படை வாழ்வாதார தேவைகளை கூட பூர்த்தி செய்ய முடியாமல் அவர்கள் தவித்து வருகின்றனர். நிர்வாக குழுவின் பதவிக் காலம் முடிவடைந்து ஒரு மாதத்திற்கும் மேலாகியும், புதிய நிர்வாகம் அமைவதில் தொடர் முட்டுக்கட்டைகள் நீடிக்கின்றன. பொதுக் குழு உறுப்பினர்கள் மூலம் ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்படாமல், குறுக்கு வழியில் அதிகாரத்தை கைப்பற்றும் நோக்கில் சிலர் செயல்படுவதாகவும், இதன் காரணமாக பல்வேறு முறைகேடு வழக்குகளும் புதுப்பித்தல் தொடர்பான வழக்குகளும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளதாகவும் கூறப்படுகிறது. சட்டப்பூர்வமான நிர்வாகம் இல்லாத சூழலில், முதன்மை கல்வி அலுவலர் (CEO) மற்றும் மாவட்ட கல்வி அலுவலர் (DEO) ஆகியோர் நேரடியாக தலையிட்டு ஆசிரியர்களுக்கான மாத சம்பளத்தை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும் என்பதே ஆசிரியர்களின் முதன்மை எதிர்பார்ப்பாக உள்ளது. ஆனால், இங்குள்ள நிலவரமோ மேலும் கவலையளிப்பதாக உள்ளது. நிர்வாக குழுவின் காலம் முடிந்தத கவலை மாவட்ட கல்வித்துறைக்கு முறைப்படி தெரிவிக்க வேண்டிய பள்ளி தலைமை ஆசிரியர், அதை செய்யாமல் மறைத்து வருவதாக புகார்கள் எழுகின்றன. மேலும், புதிய நிர்வாகம் பொறுப்பேற்ற பின்னரே ஊதியம் வழங்கப்படும் என்று கூறி, ஆசிரியர்களை மிரட்டி வலுக்கட்டாயமாக கடிதங்களை தலைமை ஆசிரியரும் நிர்வாக செயலாளரும் பெற்று வருவதாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றனர். பதவி ஆசையினாலும் சுயநலத்தினாலும் பள்ளி நிர்வாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த சீர்கேடுகளால், தினமும் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதோடு, இறுதியில் மாணவர்களின் கல்வியும் எதிர்காலமும் கேள்விக்குறியாகும் சூழல் உருவாகியுள்ளது. எனவே, மாவட்ட கல்வி நிர்வாகமும் தமிழக அரசும் இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு, தற்காலிக நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆசிரியர்களுக்கான நிலுவை சம்பளத்தை உடனே வழங்க வேண்டும் என்றும், முறையான தேர்தலை நடத்தி பள்ளி நிர்வாகத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்களும் பெற்றார்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சுதந்திர போராட்ட வீரர், வீரன் சந்திரலிங்கனார் 226.வதுஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு அவரது வாரிசுதாரர் சூரிய லட்சுமி, VAO.விரமா முனிவர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்



சுதந்திர போராட்ட வீரர், வீரன் சந்திரலிங்கனார் 226.வதுஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவசிலைக்கு அவரது வாரிசுதாரர் சூரிய லட்சுமி, VAO. விரமா முனிவர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்,

வெள்ளையர்களை எதிர்த்து மனித வெடிகுண்டாக மாறி அழித்த சுதந்திர போராட்ட வீரர், மாவீரன் சந்திரலிங்கனார் 226.வதுஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவசிலைக்கு அவரது வாரிசுதாரர் சூரிய லட்சுமி, VAO.விரமா முனிவர் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்,





### சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் சுந்தரலிங்கனார் 226.நினைவுதினத்தை முன்னிட்டு

## ஓட்டப்பிடாரம் ஊராட்சி வளர்ச்சி ஆனையாளர் ஹைகோர்ட்ராஜா, மணியாட்சி சரக காவல்துறை கண்காணிப்பாளர் கண்ணன் ஆகியோர் அன்னாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் சுந்தரலிங்கனார் 226.நினைவுதினத்தை முன்னிட்டு ஓட்டப்பிடாரம் ஊராட்சி வளர்ச்சி ஆனையாளர் ஹைகோர்ட்ராஜா, மணியாட்சி சரக காவல்துறை கண்காணிப்பாளர் கண்ணன் ,ஆகியோர் அன்னாரின் திருவுருவசிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

ஓட்டப்பிடாரம் 10.சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் சுந்தரலிங்கனார் 226 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி ஆணையாளர் ஹைகோர்ட் ராஜா, மற்றும் மணியாச்சி சரக காவல் கண்காணிப்பாளர் கண்ணன், ஆகியோர், மாலை அணிவித்து மரியாதை செய்தனர்,

இன் நிகழ்ச்சியில் ஓட்டப்பிடாரம் இன்ஸ்பெக்டர் கார்த்திக், எஸ்ஐ மார்த்தாண்ட பூபதி, எஸ் பி, எஸ் ஐ செந்தில் ஆறுமுகம், எஸ் பி சிஐடி காருண்ய ராஜா, மற்றும் தேவேந்திர மக்கள் முன்னேற்ற கழக தலைவர் நாஞ்சை ரவி தேவேந்திரன் , திருநெல்வேலி மாவட்டம் கரம்பை ராமகிருஷ்ணன், அன்பு ஜெயராம், சுந்தரலிங்கனார் கல்வி அறக்கட்டளை தலைவர் சக்தி முருகன், உட்பட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



## சுதந்திர போராட்ட வீரர், வீரன் சந்திரலிங்கனார் 226.வதுஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சிலைக்கு ஓட்டப்பிடாரம் தவெக வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுக கிருஷ்ணன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்

சுதந்திர போராட்ட வீரர், வீரன் சந்திரலிங்கனார் 226.வதுஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவசிலைக்கு ஓட்டப்பிடாரம் தவெக வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுக கிருஷ்ணன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்,

வெள்ளையர்களை எதிர்த்து மனித வெடிகுண்டாக மாறி அளித்த சுதந்திர போராட்ட வீரர், வீரன் சந்திரலிங்கனார் 226.வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சிறுகுறு தொழிற் துறை அமைச்சர் மதன் ராஜா வழிகாட்டுதலின் படி அவரது திருவுருவசிலைக்கு ஓட்டப்பிடாரம் தவெக வடக்கு ஒன்றிய செயலாளர் ஆறுமுக கிருஷ்ணன் மாலை அணிவித்து மரியாதை செய்தார்,

**திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை அணைப்பட்டி ரோடு பகுதியை சேர்ந்தவர். ரெஜிதா (36). இவரது வீட்டில் அதே பகுதியை சேர்ந்த தினேஷ்(33) தச்சு தொழிலாளி. இவர் ரெஜிதா வீட்டில் பீரோவில் இருந்த 7 பவுன் தங்க நகையை திருடினார். இது குறித்து நிலக்கோட்டை போலீசார் வழக்கு பதிவு செய்து நகையை திருடிய தினேஷை கைது செய்தனர்**



### இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில்

# தமிழக முதலமைச்சர் கோப்பை 2026, மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள்

## மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்கள்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழக முதலமைச்சர் கோப்பை 2026, மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்கள்..

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன், வாலாஜா வட்டம், வன்னிவேடு அரசினர் மேல்நிலைப் பள்ளியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் தமிழக முதலமைச்சர் கோப்பை 2026, மாவட்ட அளவிலான பள்ளி மாணவர்கள் மட்டைப்பந்து போட்டியை தொடங்கி வைத்து, மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்தார்.






இராணிப்பேட்டை மாவட்டத்தில் நேற்று பள்ளி மாணவிகளுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் கீழ்க்கண்ட இடங்களில் நடைபெற்று வருகின்றன:

அரசினர் மேல்நிலைப் பள்ளி, இராணிப்பேட்டை கைப்பந்து மற்றும் கபாடி

DAV பெல் பள்ளி கால்பந்து மற்றும் கையுந்துப்பந்து

ஸ்ரீ இராமகிருஷ்ணா பெல் மேல்நிலைப் பள்ளி கோகோ

லாலாபேட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளி சிலம்பம் (தொடுமுறை)

★ ஆற்காடு அரசினர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மேசைப்பந்து

ஆற்காடு அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளைகோல்பந்து

ஆற்காடு ஸ்ரீ இராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி சதுரங்கம்

சிறுமலர் மடம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி, இராணிப்பேட்டை கூடைப்பந்து

Young Master Badminton Academy, தாழனூர் இறகுப்பந்து

இப்போட்டிகளில் இராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தங்களது விளையாட்டுத் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

முதலமைச்சர் கோப்பை 2026 மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 09.09.2026 முதல் 30.09.2026 வரை பள்ளிப் பிரிவு, கல்லூரிப் பிரிவு, பொதுப் பிரிவு, மாற்றுத் திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்கள் என ஐந்து பிரிவுகளில், இராணிப்பேட்டை மாவட்டத்தின் பல்வேறு விளையாட்டு மைதானங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் தொடர்ந்து நடைபெறவுள்ளன.

முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான போட்டி அட்டவணை, பதிவு மற்றும் இதர விவரங்களை tncmtrophy.sdat.in இணையதளத்தில் பொதுமக்கள் அறிந்து கொள்ளலாம்.

மாணவ, மாணவியர்களிடையே விளையாட்டு ஆர்வத்தை அதிகரித்தல், அவர்களின் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணருதல் மற்றும் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளை அடையாளம் காணுதல் ஆகிய நோக்கங்களுடன் இப்போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்ச்சியில் முதன்மை கல்வி அலுவலர் மோகனா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன், ஊராட்சி மன்ற தலைவர் கற்பக ராணி சக்திவேல், தலைமையாசிரியர் சதீஷ் குமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# தனியார் பள்ளிகள் அங்கீகார 'மோசடி' விவகாரத்தில் 177 புகார்கள்: காவல் துறை

தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் பெற்றுத் தருவதாக கூறி பணம் வசூலித்து, மோசடி செய்துள்ளதாக இதுவரை 177 புகார்கள் அளிக்கப்பட்டுள்ளதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் மத்திய குற்றப் பிரிவு போலீஸார் தெரிவித்துள்ளனர்.

தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம், டிடிசிபி, சிம்டிஏ அனுமதிகள் மற்றும் பிற சட்டப்பூர்வ அனுமதிகளைப் பெற்றுத் தருவதாகக் கூறி, தமிழகம் முழுவதும் தனியார் பள்ளி நிர்வாகிகளிடமிருந்து 100 கோடி ரூபாய் வரை வசூலித்து மோசடி செய்ததாக, தனியார் பள்ளிகள் சங்கத் தலைவர் அரசகுமார் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கு எதிராக சென்னை மத்திய குற்றப் பிரிவு போலீஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இந்த வழக்கில் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் சங்க தலைவர் அரசகுமார் கைது செய்யப்பட்டு குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.



இந்த நிலையில், தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்க பொருளாளரும், முன்னாள் எம்.எல்.ஏ முத்துக்குமார், முன்ஜாமீன் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நீதிபதி வி.லட்சுமிநாராயணன் முன் விசாரணைக்கு வந்தபோது, காவல் துறை தரப்பில், தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம் பெற்றுத் தருவதாக கூறி பணம் வசூலித்து, மோசடி செய்துள்ளதாக இதுவரை 177 புகார்கள் அளிக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணை தொடர்ந்து நடந்து வருவதாகவும், இந்த மனுவுக்கு பதிலளிக்க அவகாசம் வழங்க வேண்டும் என கேட்கப்பட்டது.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, காவல் துறை தரப்பில் பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை நாளைக்கு தள்ளிவைத்தார்.

# ராணிப்பேட்டை புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா ; திருத்தேர் பவனியுடன் நிறைவு பெற்றது

## விழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்று புனித ஆரோக்கிய அன்னையின் அருளாசீர் பெற்று சென்றனர்

ராணிப்பேட்டை புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழாற்றும் இன்று மாலை திருத்தேர் பவனியுடன் நிறைவு பெற்றது.விழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்று புனித ஆரோக்கிய அன்னையின் அருளாசீர் பெற்று சென்றனர்.

ராணிப்பேட்டை புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா கடந்த மாதம் 29 ஆம் தேதி மாலை 6.45 மணியளவில் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

இந்த தொடக்க விழாவில் திரளான பக்தர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து கலந்துகொண்டு ஆரோக்கியஅன்னையை வழிபட்டு சென்றனர்.

ராணிப்பேட்டை புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா மற்றும் தேர் பவனியுடன் இன்று நிறைவுபெற்றது

தொடக்க நாளான 29 ஆம் தேதி அன்று மாலை 6.30 மணியளவில் ராணிப்பேட்டை சிறுமலர் மடம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி வாளகத்திலிருந்து புனித நீரால் அர்ச்சிக்கப்பட்ட புனித அரோக்கிய அன்னையின்திருக்கொடியை முக்கிய வீதிகள்வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இதனை அடுத்து புனித ஆரோக்கிய அன்னை ஆலய வளாகத்திலுள்ள புதிய திருக்கொடி கம்பத்தில் புனித ஆரோக்கிய அன்னையின் திரு உருவக் கொடியை அதிர்வேட்டு முழங்க ஆலய மணியோசைகள் முழக்



கங்களுடன்புதிய பங்குத் தந்தை ஞானசேகரன் தலைமையில் அரக்கோணம் அருட்தந்தை எஸ். மலையப்பன் ஏற்றி வைத்து பாடல் திருப்பலி பூஜையை நிகழ்த்தினார்.

தொடக்க விழாவில் ராணிப்பேட்டை, காரை, அவரக்கரை, கொண்டகுப்பம், வாலாஜா, வாலாஜா இலங்கை அகதிகள் முகாம், அம்மூர், லாலாப்பேட்டை, ஆற்காடு இறைமக்கள் உள்பட திரளான பக்தர்கள் கலந்துகொண்டு ஆரோக்கிய அன்னையை வழிபட்டு சென்றனர்.

இதனைத் தொடர்ந்து கடந்த 30 ம் தேதி முதல் இன்று செப்டம்பர் 8 ம் தேதிவரை தினமும் மாலையில் ஜெபமாலைகள், திருப்பலி பூஜைகள், மறையுறைகள், 2 நாள் தியானம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் பல்வேறு அருட்தந்தையர்களால் நடத்தப்பட்டது.

நேற்று செப்டம்பர் 7 ம் தேதி மாலை திவ்ய நற்கருணையின் சிறப்பு பவனி, திருப்பலி பூஜை, திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் இராமேஸ்வரம் பாலிடெக்னிக் கல்லூரி முனைவர் தந்தை எழிலரசன் தலைமையில் நடைபெற்றது.

இன்று செப்டம்பர் 8 ம் தேதி புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

இன்று காலை 8 மணிக்கு ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழாதிருப்பலி பூஜை மற்றும் சிறுவர் சிறுமியருக்கு புதுநன்மை வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகள் வேலூர் மறை மாவட்ட பொருளாளர் தந்தை எ.ரிச்சர்ட் பெரைரா தலைமையில் சிறப்பு கூட்டு பாடற் திருப்பலிப்பூஜை நடைபெற்றது.

இன்று மாலையில் 6 மணியளவில் புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழா திருப்பலி பூஜையை புதிய பங்குத் தந்தை ஞானசேகரன் தலைமையில் ராணிப்பேட்டை அருட்தந்தையர்கள் ராய்ஸ், வெஸ்லி, ஜெயக்குமார், பார்த்தசாரதி, சாமிநாதன், பால்ராஜ் ஆகியோர் பிறப்பு திருப்பலி பூஜையை நிகழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 8 ஆம் தேதி இரவு சிறப்பு வண்ண மின்விளக்குகளாலும் மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட திருத்தேரில் புனித ஆரோக்கிய அன்னையின் திருஉருவம் தாங்கிய தேர்பவனியை பங்குத்தந்தை ஞானசேகரன் தொடங்கி வைத்தார்.

மேற்கண்ட இந்த புனித ஆரோக்கிய அன்னை ஆலய 96 ஆம் ஆண்டு பெருவிழாவில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு புனித ஆரோக்கிய அன்னையை வழிபட்டு சென்றனர்.

இந்த புனித ஆரோக்கிய அன்னை ஆலய ஆண்டு பெருவிழா ஏற்பாடுகளை புதிய பங்குத் தந்தை ஞானசேகரன் மற்றும் ராணிப்பேட்டை புனித லொயோலா அருட்தந்தையர்கள் புனித சார்லஸ் சபை அருட்கன்னியர்கள், அம்பிய பொறுப்பாளர்கள் ஆலோசனை குழுவினர் வேதியர்டேவிட், விழாக் குழுவினர், பாடகற்குழுவினர்கள், இறைமக்கள் உள்பட பலர் செய்திருந்தனர்.

ஆரோக்கிய அன்னை ஆலய ஆண்டு பெருவிழா முன்னிட்டு ஆலயம் உள்ளும் மற்றும் வெளிப்புறங்களிலும் வண்ண மின் விளக்குகளாலும் வண்ண மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இது பெருவிழாவிற்கு வந்த அனைவரையும் கவர்ந்து இழுத்தது என்பது குறிப்பிடத்தக்கது.


தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779




பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மலைக்கோயில் உண்டியல்கள் திறக்கப்பட்டுஎண்ணப்பட்டதில்,ரொக்கமாக₹2கோடியே41லட்சத்து31ஆயிரத்து 873 ரூபாயும், 425 கிராம் தங்கம், 7.8 கிலோ வெள்ளி மற்றும் 950 வெளிநாட்டு கரன்சி நோட்டுகளும் காணிக்கையாகக் கிடைத்துள்ளன.

### திருவிடைமருதூர் அருகே

# ரூ.10 கூடுதல் வசூல் டாஸ்மாக் ஊழியர்கள் 6 பேர் பணியிடை நீக்கம்

திருவிடைமருதூர் அருகே உள்ள டாஸ்மாக் கடையில் மதுபாட்டிலுக்கு ரூ.10 கூடுதலாக வசூலித்த 6 பணியாளர்களை பணியிடை நீக்கம் செய்து டாஸ்மாக் மேலாளர் உத்தரவிட்டார்.

கும்பகோணம் அருகே உள்ள திருவிடைமருதூரை அடுத்த குறிச்சியில் உள்ள டாஸ்மாக் கடையில் மதுபாட்டிலுக்கு ரூ.10 கூடுதலாக வசூலிக்கப்படுவது குறித்து நேற்று மது வாங்கச் சென்ற ஒருவர் வீடியோ எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டார்.

இந்த வீடியோ வைரலான நிலையில், இது தொடர்பாக டாஸ்மாக் மேலாளர் ஐஸ்வர்யா விசாரணை நடத்தினார்.

இதில், நிர்வாக நலனுக்கு குந்தகம் மற்றும் அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டதன் காரணமாக, அந்த டாஸ்மாக் கடை மேற்பார்வையாளர்கள் செந்தில்குமார், சேகர், சரவணன், விற்பனையாளர்கள் துரைபிரகாஷ், மதியழகன், வீராச்சாமி ஆகிய 6 பேரை பணியிடை நீக்கம் செய்து இன்று உத்தரவிட்டார்.

# தண்ணீரை வீணாக்காதீர்கள்; குழந்தை திருமணத்தை தடுக்க முன்வாருங்கள்

## தண்டராம்பட்டு மக்கள் தொடர்பு முகாமில் கலெக்டர் வந்தனா கார்க் முக்கிய அறிவுறுத்தல்

திருவண்ணாமலை, செப்.10

போதிய மழை இல்லாததால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் சூழல் நிலவி வருவதையடுத்து, கிடைக்கும் குடிநீரை பொதுமக்கள் மிகவும் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்றும், மழை பெய்யும் வரை தண்ணீரைவீணாக்காமல் பாதுகாப்புடன் பயன்படுத்த வேண்டும் என்றும் திருவண்ணா மலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் அறிவுறுத்தினார்.

தண்டராம்பட்டு தேனம்மை பழனியப்பன் திருமண மண்டபத்தில் இன்று (09.09.2026) நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தலைமை வகித்தார்.

முகாமில்பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள், அவற்றின் பயன்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வழிமுறைகள் குறித்து துறை அலுவலர்கள் விளக்கினர்.

முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது:

தமிழ்நாடுமுதலமைச்சரின் வழிகாட்டுதலின் படி பொதுமக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசின் திட்டங்கள் கிராமப்புற மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதற்காக மக்கள் தொடர்பு திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் கோரிக்கைகளை அவர்களது இருப்பிடத்திற்கே வந்து கேட்டறிந்து, அவற்றின் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்வதற்கு இம்முகாம்கள் முக்கிய வாய்ப்பாக அமைந்துள்ளன.

திருவண்ணாமலை மாவட்டத்தில் போதிய மழை இல்லாததால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. எனவே, கிடைக்கும் தண்ணீரை பொதுமக்கள் வீணா க்காமல் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்.

மழை பெய்யும் வரை குடிநீரை மிகவும் கவனமாக பயன்படுத்த வேண்டும். குடிநீர் தொடர்பாக ஏதேனும் குறைபாடுகள் இருந்தால் உடனடியாக உள்ளாட்சி அமைப்புகளிடம் தெரிவிக்க வேண்டும்.

அந்த குறைகளை உரிய முறையில் சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பெண் குழந்தைகளை நன்றாக பராமரிப்பதுடன், அவர்களுக்கு உயர்கல்வி கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும். சரியான வயதில் மட்டுமே திருமணம்செய்துவைக்க வேண்டும்.

18 வயதுக்கு குறைவான பெண் குழந்தைகளுக்கு திருமணம் செய்யக்கூடாது. தங்கள் பகுதியில் குழந்தைத் திருமணம் நடைபெறுவது குறித்து தகவல் கிடைத்தால், உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க வேண்டும். அதேபோல், ஆண் குழந்தைகளும் உயர்கல்வி பெறுவதற்கு பெற்றோர் ஊக்கமளிக்க வேண்டும். கல்வி அவர்களின் எதிர்காலத்தை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும். குழந்தைகளுக்கு போதைப் பழக்கத்தின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய பெற்றோர் முக்கியப் பங்காற்ற வேண்டும்.

வாகனங்களில் பயணம் செய்யும்போது அனைவரும் சாலை பாதுகாப்பு விதிகளை கடைபிடிக்க வேண்டும். இருசக்கர வாகனம் ஓட்டுபவர்கள் கட்டாயம் தலைக்கவசம் அணிய வேண்டும். தலைக்கவசம் உயிரைக் காப்பாற்றும் மிக முக்கியமான பாதுகாப்பு சாதனமாகும்.

மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு திட்டங்களின் கீழ் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் அவற்றை முறையாக பயன்படுத்தி, அதிவேகமாக வாகனம் ஓட்டுவதை தவிர்த்து பாதுகாப்பான பயணத்தை மேற்கொள்ள வேண்டும். விபத்து ஏற்பட்டால் உடனடியாக அவசர உதவி எண்ணை தொடர்புகொண்டு மருத்துவ உதவியை பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, முகாமில் வருவாய்த்துறை சார்பில் 75 பயனாளிகளுக்கு பட்டா மாற்றத்திற்கான ஆணைகள், 7 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா ஆணைகள், 19 பயனாளிகளுக்கு உட்பிரிவு பட்டா ஆணைகள், 26 பயனாளிகளுக்கு இருளர் சாதிச் சான்றிதழ்கள், 118 பயனாளிகளுக்கு புதிய குடும்ப அட்டைகள் மற்றும் 20 பயனாளிகளுக்கு இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு நிவாரணம் வழங்கப்பட்டது.

பழங்குடியினர் நலத்துறை சார்பில் 21 பயனாளிகளுக்கு பழங்குடியினர் நல வாரிய அட்டைகள் வழங்கப்பட்டன.

வேளாண்மைத்துறை சார்பில் துவரை, சூடோமோனாஸ் நுண்ணுயிர் கலவை, உயிர் உரம் உள்ளிட்ட இடுபொருட்களும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பில் சொட்டு நீர்ப்பாசனம் மற்றும் நிழல் வலைக்குடில் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு மூன்று சக்கர நாற்காலிகளும், ஊரக வளர்ச்சித்துறை சார்பில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடனுதவிகளும் வழங்கப்பட்டன.

இதன்மூலம் மொத்தம் 322 பயனாளிகளுக்கு ரூ.38 லட்சத்து 43 ஆயிரத்து 600 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் வழங்கினார்.

மேலும், பொதுமக்களிடமிருந்து 55 கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டார்.

மனுக்கள்மீதுவிரைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

முன்னதாக, போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டிற்கு எதிரான உறுதிமொழி ஆகியவற்றை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து, பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த கண்காட்சி அரங்குகளை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் அ. சிவசுப்பிரமணியன், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் செல்வம், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு) இளவரசன், வேளாண்மை இணை இயக்குநர்(பொ) தி.மலர்விழி, திட்ட அலுவலர் (பழங்குடியினர் நலன்) கலைச்செல்வி, திட்ட அலுவலர் (ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி) அன்பரசி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் செந்தில்குமரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மதுசெழியன், தண்டராம்பட்டு வட்டாட்சியர் ராஜேந்திரன் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA